<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS 26/2018**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 28.08.2025

Pw2 (ரவிசந்திரன் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை ( பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

வாதி எனக்கு உறவினர். வாதி வயரிங் வேலை செய்து வருகிறார். அவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாதி குடியிருக்கும் வீடு அவரின் சொந்த வீடு. வாதி பிரதிவாதியின் வீட்டை விலை பேசியிருப்பதாக 15.09.2017 ல் தான் நான் டீ கடையில் நின்றிருந்தபோது சொன்னார். அவர் சென்ற பிறகு தான் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பேசப்பட்டது என்பதை பாலகிருஷ்ணன் என்னிடம் சொன்னார். எவ்வளவு ரூபாய் நோட்டுக்களாக நான்கு லட்சம் அட்வான்ஸ தொகை கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் பாக்கி கிரயத் தொகை 50 ஆயிரம் தான் உள்ள நிலையில் பாக்கி தொகை கொடுத்து கிரயம் பெற்றுக் கொள்ளலாம் என கேட்டபோது அசல் பத்திரம் சொசைட்டியில் இருப்பதாகவும் அது வாங்குவதற்காக கிரய காலம் நிர்ணயம் செய்யப்பட்டதாக கூறினார். 2 மாத காலத்தில் சொசைட்டியிலிருந்து ஆவணம் பெற்றுத் தருவதாக சொன்னார். ஆனால் கிரய ஒப்பந்தம் ஒரு வருட காலக் கெடு கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அந்த விவரம் எனக்கு தெரியும். கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் ரசீது ஒன்று ஏற்படுத்தினார்கள் என சொல்லியுள்ள ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். வீடு ஈஸ்வரமூர்த்தி பெயரில் இருப்பதாக சொன்னார். ஈஸ்வரமூர்த்தியின் மனைவி ஆவணத்தில் சாட்சியாக ஏன் கையொப்பம் செய்துள்ளார் என கேட்டேனோ என்றால் தகப்பனார் பெயரில் சொத்து இருப்பாலும் குழந்தைகள் மேஜர் என்பதால் அனைவரிடமும் கையொப்பம் பெறப்பட்டது. அசல் ஆவணம் அந்த தேதியில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சொத்திற்கான அசல் பத்திரம் தற்போது பாலகிருஷ்ணனிடம் உள்ளது. எவ்வளவு நாட்கள் கழித்து அசல் பத்திரம் வாதியிடம் கொடுக்கப்பட்டது என்று நான் கேட்டேனா என்றால் 2 மாதம் கழித்து கேட்டேன் அவர்

வந்து விட்டதாக சொன்னார். நான் பாலகிருஷ்ணனிடம் தான் அவ்வாறு கேட்டேன். தாவா தாக்கல் செய்யும் முன்பாக வாதி பிரதிவாதியை கிரயம எழுதி கொடுக்க சொல்லி கேட்டார் எனவும் ஆனால் பிரதிவாதி தனக்கு விடுமுறை இல்லை என கிரயம் செய்து கொடுக்க முன்வரவில்லை என்று கூறினார். பிரதிவாதி என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்று நான் படித்து தெரிந்து கொள்ளவில்லை. வாதி லேவாதேவி தொழில் செய்து வருகிறார் என்றும் அதன் காரணமாக பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் சேர்த்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 15.09.2017 ல் கிரய ஒப்பந்தம் அல்லாது கடனுறுதி சீட்டுகளிலும் வாதி பிரதிவாதி மற்றும் அவரின் குடும்பத்தாரிடம் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து வாங்கினார் என்றால் சரியல்ல. கடனிற்காக தான் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, வாதி தொடர்ந்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வாதி துர்லாபம் அடைய வேண்டி பிரதிவாதி மற்றும் அவரின் குடும்பத்தாரிடம் ஆவணங்கள் பெற்றுள்ளார் என்றும் வாதி எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக வழக்கு கிரய ஒப்பந்தம் நீங்கலாக வேறு ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை. கிரய ஒப்பந்தத்திற்கு முன்பாக பிரதிவாதியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரசீது ஏற்படுத்துவதற்கு சொசைட்டியிலிருந்து எப்போது வந்தனர் என்றால மதியம் 2 மணிக்கு வந்தனர். 2 மணி நேரத்தில் அந்த ரசீது பதிவு செய்யப்பட்டது. ரசீதும் கிரய ஒப்பந்தமும் ஒரே தேதியில் பதிவிற்கு தாக்கல் செய்யப்பட்டது, எது முதல் ஆவணம் என்று எனக்கு தெரியாது. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED — Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS